# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை—600 032.
தொலைபேசி: 044—22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை—600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப, (ஓ).
************

முறையீட்டு மனு எண்: 0037/2017/ந

ஆணை எண்: 077/2017

நாள்: 26/04/2017

1. திரு. ஏ. ஜெகநாதன்,
   த/பெ. அரசப்பன், மேலூர்

2. திரு.S. சசிக்குமார்,
   த/பெ. சீனிவாசன், மேலூர். - முறையீட்டு மனுதாரர்கள்

நகராட்சி ஆணையர்,
மேலூர் நகராட்சி. - எதிர் மனுதாரர்

## ஆணை

முறையீட்டு மனுதாரர் திரு. ஏ. ஜெகநாதன் என்பவர் தனது வழக்கறிஞர் மூலமாக தாக்கல் செய்த 22.02.2017 நாளிட்ட மனு மற்றும் பிறிதொரு முறையீட்டு மனுதாரர் திரு. S. சசிக்குமார் என்பவரது 01.02.2017 நாளிட்ட மனு ஆகியவை இரண்டும் மேலூர் நகராட்சி கடைகள் ஏலம் தொடர்பானவை ஆகும். இம்மனுக்கள் இம்முறைமன்ற நடுவத்தில் எண்.0637/2017 ஆக பதிவு செய்யப்பட்டு மனுதாரர்களுக்கு அறிவிப்பாணை எண்.0037/2017 ந—2 நாள்:03.03.2017 மூலம் தகவல் அளிக்கப்பட்டது.

2) மேலும், முறையீட்டு மனுதாரர்களது முந்தைய மனு எண்.0952/16 மற்றும் 0968/16 தொடர்பாக உரிய ஆணைகள் (ஆணை எண்.0019/2017 நாள்:07.02.2017) இம்முறைமன்ற நடுவத்தால் வெளியிடப்பட்ட விவரமும் 03.03.2017 நாளிட்ட இவ்வலுவலக விசாரணை அழைப்பாணையில் தெரிவிக்கப்பட்டது. இதனிடையே தற்போது வரப்பெற்றுள்ள முறையீட்டு மனுக்களின் "ஏல வைப்புத் தொகைகள் நகராட்சி வங்கிக் கணக்கில் செலுத்தப்படவில்லை என்ற புகார் தொடர்பாக உரிய அறிக்கையினையும், ஆவணங்களையும் சமர்ப்பித்திட மேலூர் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது.

3) மேற்படி முறையீட்டு மனுக்கள் 2015-ஆம் ஆண்டு, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் (முறையீடுகள் தாக்கல், விசாரணை மற்றும் தீர்வு செய்யப்படுதல் முறைகள்) விதிகளின்படி உரிய படிவத்திலும், நீதிமன்ற அஞ்சல் வில்லை ஒட்டப்படாமலும் தாக்கல் செய்யப்பட்டிருப்பினும், இம்முறையீட்டு மனுக்களை தள்ளுபடி செய்யாமல் கூடுதல் வாய்ப்பளித்திடும் வகையில் 12.04.2017 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு முறையீட்டு மனுதாரர்களுக்கு அழைப்பாணைகள் (முறையீட்டு மனு எண்.0037/2017 நாள்:03.03.2017) அனுப்பப்பட்டன.

4) மேலூர் நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.129/2016/அ2 நாள்:20.03.2017ல் வரப்பெற்று பரிசீலிக்கப்பட்டது. மேற்படி அறிக்கையில் இம்முறைமன்ற நடுவ ஆணைகளுக்கிணங்க, புகார் மனுக்களில் குறிப்பிட்டுள்ள நகராட்சி கடைகள் ஏலம் தொடர்பான ஏல வைப்புத் தொகைக்கான வங்கி வரைவோலைகள் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டது குறித்து உறுதி செய்திட ஏதுவாக தொடர்புடைய, நகராட்சி கணக்கு பதிவேடுகள் மற்றும் வங்கி புத்தகங்கள் ஆய்வு செய்யப்பட்டதென அவ்வறிக்கையில் உறுதி செய்யப்பட்டுள்ளது. புகாரில் தெரிவித்துள்ளது போல் ஏல வைப்புத் தொகை மற்றும் கூடுதல் வைப்புத் தொகை நகராட்சி வங்கி

கணக்கில் செலுத்தியதில் எந்த முறைகேடும் நிகழவில்லை என்று உறுதிபட தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தொடர்புடைய ஆவணங்களின் நகல்களும் அவ்வறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் முறையீட்டு மனு, நகராட்சி ஆணையர் அறிக்கை அனைத்தும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. மேலே பத்தி எண்.3ல் குறிப்பிட்டுள்ளவாறு விதிகளின்படி முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்படாத நிலை மட்டுமின்றி 12.04.2017 அன்று நிர்ணயிக்கப்பட்டிருந்த விசாரணைக்கும் முறையீட்டு மனுதாரர்கள் ஆஜராகவில்லை. இந்நிலையில் முறையீட்டுதாரர்கள் தங்களது முறையீடு குறித்து போதிய ஆதாரங்கள் அளிக்க தவறியது மற்றும் உரிய விதிகளின்படி முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யாதது ஆகிய காரணங்களாலும் மற்றும் நகராட்சி ஆணையரது அறிக்கை ஏற்றுக்கொள்ளப்படும் நிலையில் இருப்பதாலும் இம்முறையீட்டு மனுக்களை தள்ளுபடி செய்திட முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 26-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணையிடப்படுகிறது.

—//ஒப்பம்//—
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 4/5/17

3-5-17

4/5/17

பெறுநர்

1. திரு. ஏ. ஜெகநாதன்,
   த/பெ. அரசப்பன்,
   மந்தை பின்புறம், புதுச்சுக்காம்பட்டி,
   மேலூர், மதுரை மாவட்டம் - 625 106.

2. திரு. S. சசிக்குமார்,
   த/பெ. சீனிவாசன்,
   9, மண்கட்டி தெப்பக்குளம்,
   மேலூர், மதுரை மாவட்டம் - 625 106.

3. நகராட்சி ஆணையர்,
   மேலூர் நகராட்சி, மேலூர்,
   மதுரை மாவட்டம் - 625 106.

நகல்
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
மதுரை மண்டலம்.